# முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

அசல் வழக்கு எண். 13/2021

நாள் : 16.11.2022

வா.சா.2 திரு. காசிம் கித்தூர் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி எனது உறவினர் இல்லை. வாதியின் குடும்ப விபரங்கள் எனக்கு தெரியும். 2004 ல் இருந்து 2011 வரை நான் மலேசியாவில் வேலை பார்த்து வந்தேன். வாதி மலேசியாவில் 2003 ல் இருந்து சுமார் 6 வருடம் வரை வேலை செய்தார். நானும், வாதியும் மலேசியாவில் ஒன்றாக வேலை பார்த்து வந்தோம் என்று கூறுவதற்கு ஆதாரமாக ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் மலேசியாவில் வேலை பார்த்து வந்தேன் என்று காட்டுவதற்கு ஆதாரமாக எனது பாஸ்போர்ட் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் என்னிடம் எனது பாஸ்போர்ட் உள்ளது. தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம். பாஸ்போர்ட்டை பார்த்தால் நான் எத்தனை வருடம் மலேசியாவில் வேலை பார்த்தேன் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். வாதியின் தாயார் பெயர் , சகோதரி பெயர் எனக்கு தெரியும். வாதியின் சகோதரிக்கு குறிப்பாக எந்த வருடத்தில் திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. ஆனால் நான் அப்போது ஓரியூரில் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு வயது 16 இருக்கலாம். நான் 11 ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். வாதியின் தாயாருக்கு மார்பகப்புற்றுநோய் இருந்த விபரம் எனக்கு தெரியும். புற்றுநோய் காரணமாகத்தான் அவர் காலமானார் என்றால் சரிதான். வாதியின் தாயாரை பாதுகாத்து பராமரித்து வந்தது அனைத்தும் பிரதிவாதிதான் என்றால் சரியல்ல. அவரும் பார்த்திருக்கலாம். வாதியும் பணம் அனுப்பினார். வாதியின் தாயார் இறக்கும்போது வாதி மலேசியாவில் இருந்தார் என்றால் சரிதான். இறப்பிற்கு அவர் வரவில்லை என்று சொன்னால் அவரால் வரமுடியவில்லை. அவர் தாயார் இறந்தபின்பு 6

மாதம் அல்லது 1 வருடம் கழித்து வாதி இந்தியா வந்தார். நான் மலேசியாவில் தான் இருந்தேன். வாதிக்கு 2019 ல் திருமணம் நடந்தது. வாதியின் மனைவி ஏற்கனவே திருமணமானவர் என்று சொன்னால் திருமணமாகி விவாகரத்து பெற்றவர். திருமணத்திற்கு முன்பே வாதிக்கும் அவர் திருமணம் செய்துகொண்ட பெண்ணிற்கும் தொடர்பிருந்து அவர் சம்பாதித்த பணத்தை அவருக்குத்தான் அனுப்பிவைத்தார் என்றால் சரியல்ல. 3 இலக்க சொத்துக்களைப் பொறுத்து தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த சொத்துக்களை தவிர வாதிக்கு வேறு சொத்துக்கள் இல்லை. 2 வது இலக்க சொத்தை பற்றிய விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியாது. சர்வே எண்ணும் எனக்கு தெரியாது. தாவா 1ம் இலக்க சொத்தில் பிரதிவாதிதான் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் வீட்டில் அவர்தான் குடியிருக்கிறார் அது வாதி மற்றும் அவரது தந்தையுடைய வருமானத்தில் கட்டியதாகும். தாவா 1 வது இலக்க சொத்து எவ்வாறு அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. 2, 3 வது இலக்க சொத்துக்களும் அவர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. தாவா 3 இலக்க சொத்துக்களும் பிரதிவாதியின் தனித்த அனுபவத்தில் இன்றுவரை உள்ளது என்றால் சரியல்ல. வாதி எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம்/ஜி. விஜயா,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்